அடங்குகிறது. உடலில் எதிர்ப்பு சக்தி இல்லை என்றால் தூய்மையான காற்றாக இருந்தாலும் ஒரு குறிப்பிட்ட காலத்தில் இந்த நோய் பரவ வாய்ப்பு இருக்கிறது. எதிர்காலத்தில் இந்த நோய் தடுப்பு முறைகளைப்பற்றி மருத்துவ வல்லுநர்கள், சிறந்த ஆராய்ச்சிகளை மேற்கொண்டு, தக்க ஆலோசனைகளைத் கூறக்கூடும்.

மேட்டுப்பாளையத்திலுள்ள தாய்-சேய் நல விடுதி

*295 வினா—திரு. மே. சி. தூயமணி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மேட்டுப்பாளையம் நகரத்திலுள்ள அரசினர் மருத்துவ மனையிலுள்ள தாய்-சேய் நல விடுதியை விரிவுபடுத்துவது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: திரு. பி. ராமசாமி முதலியார், திருமதி மங்குத் தாயம்மாள் ஆகிய இருவர் கொடுக்க முன்வந்துள்ள நன்கொடையைப் பயன்படுத்தி மேட்டுப்பாளையம் அரசினர் மருத்துவமனையில் ஒரு தாய்-சேய் நல விடுதி கட்ட அரசிடம் ஒரு செயற்குறிப்பு உள்ளது.

திரு. மே. சி. தூயமணி: தலைவரவர்களே, மேட்டுப்பாளையம் அரசினர் மருத்துவமனையிலுள்ள தாய்-சேய் நல விடுதி 20 ஆண்டு களுக்கு முன்னால் தனியார் ஒருவரால் கட்டப்பட்டது. இப்போது பெருகிவரும் ஜனத்தொகைக்கு ஒப்ப அந்த விடுதியிலுள்ள வசதி கள் போதாது. ஆகவே, அதை விரிவுபடுத்தி, தாய்மார்களின் தொல்லைகள் போக்கப்பட நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: இப்போது இரண்டு மதிப் பிற்குரிய பெருமக்கள் 15,000 ரூபாய், 30,000 ரூபாய் என்ற அளவில் நன்கொடை வழங்குவதாக அறிவித்து இருக்கிறார்கள். அவர்கள் கொடுக்கும் நன்கொடையைக் கொண்டு தனித்தனி கட்டடமாகக் கட்ட வேண்டுமா, ஒரே கட்டடமாகக் கட்டவேண்டுமா என்று அவர்களிடம் கேட்கப்பட்டிருக்கிறது. அதை அவர்களே கட்டப் போகிறார்களா அல்லது அரசிடம் பணத்தைக் கொடுத்து கட்டச் சொல்லப் போகிறார்களா என்பதும் தெரியவில்லை. அவர்களிடம் இருந்து இசைவு வந்தவுடன் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.